Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, JULY 25 2025

புதன்கிழமை 25, ஜூன் 2025 | ஒளி: 10 கதிர் 269 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

## ‘119’இல் தவறு இழைக்காதீர்கள்

அவசர தொலைபேசி இலக்கமான 119 இலக்கத்தை தவறாகப் பயன்படுத்தி தவறான முறைப்பாடுகளை அளிப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்து ள்ளது.

இது அவசர காலங்களில் பொலிஸ் 119 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கு அணுகும் திறனைக் குறைக்கிறது.

பொதுமக்கள் ஏதேனும் பேரிடர் ஏற்பட்டாலோ அல்லது பொலிஸ்

தொடர்ச்சி P2

12 நாள் போர்

# 24 மணி நேரத்தில் முடிவுக்கு வரும்

## ட்ரம்ப் நம்பிக்கை: பொது பதில் இல்லை



இஸ்ரேலும் ஈரானும் முழுமையான சண்டை நிறுத்தத்துக்கு ஒப்புக் கொண்டிருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலும் ஈரானும் கிட்டத்தட்ட ஒரே நேரத்தில் தன்னிடம் வந்து, ‘சமாதானம்’ வேண்டி நின்றதாக அவர் கூறியுள்ளார்.

அதேநேரத்தில், , சண்டை நிறுத்தத்துக்காக டிரம்ப் தங்களிடம் கெஞ்சியதாக ஈரான் அரசுத் தொலைக்காட்சி கூறியுள்ளது.

எந்தவொரு சண்டை நிறுத்தம் அல்லது இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துவது குறித்து எந்த “ஒப்பந்தமும்” இல்லை என்று கூறியுள்ள ஈரான் வெளியுறவு அமைச்சர் சையத் அப்பாஸ், இஸ்ரேல் தாக்குதல்களை நிறுத்தினால், ‘எங்களுக்கு பதிலடி கொடுக்கும் திட்டம் இல்லை’ என்று தெரிவித்துள்ளார்.

சண்டை நிறுத்தம் எட்டப்பட்டுள்ளதா என்று இஸேரலும் ஈரானும் இன்னும் அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்தவில்லை.

தொடர்ச்சி P2





# ‘அணையா விளக்கு’ தணியா இலக்கு

## மட்டக்களப்பில் தீபந்தம் ஏந்தி போராட்டம்

வரின்பராஜா சவேஷ்

யாழ்ப்பாணம், செம்மணி மனித புதைகுழிக்கு சர்வதேச நீதி கோரும் அணையா விளக்கு போராட்டத்திற்கு வலுசேர்க்கும் முகமாக மட்டக்களப்பு கோட்டைக்கல்லாறு ஓந்தாச்சிமடம் பாலத்தில் தீப்பந்தம் ஏந்திய போராட்டம் திங்கட்கிழமை (23) மாலை 6 மணியளவில் நடைபெற்றது.

தமிழ் மக்கள் பலரது உடலங்களைத் தாங்கிய மனிதப் புதைகுழிகள் தமிழர் தாயகமெங்கும் அதிகரித்துச் செல்கின்றன தீர்வுகள் எதுவும் இதுவரை கிடைக்காத நிலையில் குறித்த விடயத்தை சர்வதேச பார்வைக்குக் கொண்டு செல்வதோடு, அதனூடாக உறவுகளுக்கு நீதி கிடைக்க வலியுறுத்தும் வகையில் மக்கள் இந்த ‘அணையா விளக்கு’ போராட்டத்தைத் திங்கட்கிழமை (23) காலை 10.10 மணி அளவில் யாழ்ப்பாணம் செம்மணியில் 1996களில் சருகாகிப் போன கிருசாந்தியின் உறவினரால் சுடரேற்றி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த போராட்டத்திற்கு வலுசேர்க்கும் முகமாக மட்டக்களப்பில் தீப்பந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது..

தொடர்ச்சி P2

# ‘அணையா விளக்கு’ அணிதிரள அழைப்பு

நிதர்ஷன் வினோத்

அணையா விளக்கு போராட்டத்துக்கு ஆதரவளிக்க அனைவரையும் அணிதிரண்டு வருமாறு தமிழ்த் தேசிய பேரவையின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர், செவ்வாய்க்கிழமை(24) விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டறிவதற்காக சர்வதேச நீதிப் பொறிமுறையை வலியுறுத்தி வரும் நிலையில் தற்போது செம்மணியில் மேலுமொரு மனிதப் புதைகுழி கண்டறியப்பட்டுள்ளது.

யுத்தத்தின் போதும்,அதற்குப் பின்னரும் ஸ்ரீலங்கா ஆயுதப் படைகளாலும் துணை இராணுவக் குழுக்களாலும் கைது செய்யப்பட்டு மற்றும் அவர்களிடம் கையளிக்கப்பட்ட பின்னர் அல்லது அவர்களிடம் சரணடைந்த பின்னர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பெயர் பட்டியலை வெளியிடு மாறும் மற்றும் இலங்கை அரச படைகளால் நடத்தப்படும் இரகசிய முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

பெயர் பட்டியல்களை வெளியிடுமாறு,வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் அமைப்புக்களால் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வந்துள்ள போதும் இக் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

தொடர்ச்சி P2

# சிக்கலில் ஷிரந்தி



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிரந்தி ராஜபக்ஷவால் பராமரிக்கப்பட்டதாகக் கூறப்படும் மோசடி வங்கிக் கணக்கு குறித்து மீண்டும் விசாரணை நடைபெற்று வருவதாக பொது பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரத் பிரதி அமைச்சருமான சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இந்த நிதி மோசடிகள் தொடர்பான தகவல்களை குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

# பகிடிவதை செய்த 22 மாணவர்கள் இடைநீக்கம்

முதலாமாண்டு மாணவர்களை பகிடிவதை செய்த ஒலுவில் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 22 மாணவர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக குறித்த பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் எஸ். எம். ஜுனைதீன் தெரிவித்தார்.

இந்த சம்பவம் குறித்து முறையான விசாரணை நடத்த பல்கலைக்கழக பேராசிரியர்கள் கொண்ட ஒரு சிறப்புக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சி P2

# பரந்தன் கெமிக்கல்ஸ் தலைவர் நேசராஜன்

நான்கு அரச நிறுவனங்களின் தலைவர்களின் நியமனங்களுக்குப் பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழு அண்மையில் அனுமதி வழங்கியது.

அந்தக் குழு 2025.06.20ஆம் திகதி பிரதமர் (கலாநிதி) ஹறினி அமரசூரிய தலைமையில் கூடிய போதே இந்த அனுமதி வழங்கப்பட்டது.

தொடர்ச்சி P2

# தொட்டாச் சுருங்கி காணியை இழந்து பரிதவிக்கும் தமிழர்கள்

## அம்பாறை மேலதிக அரசாங்க அதிபரிடம் முறைப்பாடு

வி.ரி.சகாதேவராஜா

தமது தொட்டாச்சுருங்கி காணியை இழந்து 35 வருடங்களாக கண்ணீருடன் பரிதவிக்கும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ. ஜெகராஜனை சந்தித்து முறையிட்டனர்.

தொடர்ச்சி P2

# “OR மற்றும் ONURக்கு ஆதரவளிக்கப்படும்”

## வோக்கர் டர்கிடம் வலியுறுத்தினார் பிரதமர்

காணாமல் போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம்(OR) மற்றும் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம் (ONUR) போன்ற உள்நாட்டு இயங்குதளங்களை வலுப்படுத்துவதன் மூலம் இந்த செயல்முறைக்கு ஆதரவளிக்கப்படும் என்றும் பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரிய வலியுறுத்தினார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோக்கர் டர்க் (Volker T-rk) மற்றும் பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரிய ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு பிரதமர் அலுவலகத்தில் திங்கட்கிழமை (23) அன்று இடம்பெற்றது.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# 24 மணி நேரத்தில் முடிவுக்கு வரும்

இஸ்ரேலும் ஈரானும் கிட்டத்தட்ட ஒரே நேரத்தில் தன்னிடம் வந்து, 'சமாதானம்' ஏற்பட வேண்டும் என்று கூறியதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார். அந்த கட்டத்தில், "அதற்கான நேரம் இது என்று எனக்குத் தெரியும்" என்று அவர் தனது ட்ரூத் சமூக ஊடக பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

முன்பே அறிவித்த சண்டை நிறுத்தத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள அவர், "உலகமும் மத்திய கிழக்கு நாடுகளும் உண்மையான வெற்றியாளர்கள். இரு நாடுகளும் தங்கள் எதிர்காலத்தில் மிகப்பெரிய அன்பு, அமைதி மற்றும் செழிப்பைக் காணும்" என்று தெரிவித்துள்ளார்.

ஈரானும் இஸ்ரேலும் சண்டை நிறுத்தத்தை பகிரங்கமாக இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை, இருப்பினும், இஸ்ரேல் தாக்குதலை நிறுத்தினால் தாங்களும் சண்டையை நிறுத்துவோம் என்று ஈரான் சமிக்ஞை செய்தது.

"இரு நாடுகளும் பெறுவதற்கு நிறைய இருக்கிறது, ஆனால், நீதி மற்றும் உண்மையின் பாதையிலிருந்து விலகிச் சென்றால் இழக்க நிறைய இருக்கிறது" என்றும், இஸ்ரேல் மற்றும் ஈரானின் எதிர்காலம் "வரம்பற்றது மற்றும் பெரிய வாக்குறுதிகளால் நிரம்பியுள்ளது. கடவுள் உங்கள் இருவரையும் ஆசீர்வதிப்பாராக!" என்றும் ட்ரம்ப் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

ஈரான் அரசு தொலைக்காட்சி செய்தி சேனலான ஐ.ஆர்.ஐ.என்.என். (IRINN) சண்டை நிறுத்தம் குறித்து செய்தி வெளியிட்டுள்ளது.

கட்டாரில் உள்ள அமெரிக்க இராணுவ தளத்தின் மீதான "வெற்றிகரமான" தாக்குதலைத் தொடர்ந்து இஸ்ரேல் மீது சண்டை நிறுத்தம் திணிக்கப்பட்டிருப்பதாகவும், ஆரானின் தாக்குதலைத் தொடர்ந்து ட்ரம்ப் சண்டை நிறுத்தத்துக்காக "கெஞ்சினார்" என்றும் அரசு தொலைக்காட்சி ஒரு செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்த குறிப்பிட்ட அறிக்கையைத் தொகுப்பாளர் சத்தமாக வாசித்தார்.

ஈரானின் இஸ்லாமியப் புரட்சிகர காவல்படை (IRGC) மற்றும் இராணுவத்தை இந்த அறிக்கை பாராட்டியதுடன், ஈரானியர்களின் "எதிர்ப்பையும்" பாராட்டியது.

முன்னதாக, இஸ்ரேலும் ஈரானும் முழுமையான சண்டை நிறுத்தத்துக்கு ஒப்புக் கொண்டிருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.

"இப்போதிலிருந்து சுமார் ஆறு மணி நேரத்தில்" சண்டை நிறுத்தம் தொடங்கும் என்று அவர் தனது சமூக ஊடக பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ட்ரம்ப் அறிவிப்பில் பரஸ்பர பகைமை குறித்த தகவல்கள் இருந்தாலும், "24ஆவது மணி நேரத்தில்" மோதல் அதிகாரப்பூர்வமாக முடிவடையும் என்று கூறப்பட்டுள்ளது.

"எல்லாம் சரியாக நடக்கும் என்ற அனுமானத்தின் அடிப்படையில், இரு நாடுகளையும் நான் வாழ்த்த விரும்புகிறேன்." என்று கூறியுள்ள டிரம்ப், இந்த இஸ்ரேல்-ஈரான் மோதலை '12 நாள் போர்' என்று குறிப்பிட்டுள்ளார்.

"இது பல ஆண்டுகள் நீடித்து, முழு மத்திய கிழக்கு பிராந்தியத்திலும் பேரழிவை ஏற்படுத்தியிருக்கக் கூடிய ஒரு போர், ஆனால், அது நடக்கவில்லை, ஒருபோதும் நடக்காது " என்று ட்ரம்ப் தனது பதிவில் தெரிவித்துள்ளார்.

சண்டை நிறுத்தம் எட்டப்பட்டுள்ளதா என்று இஸ்ரேலும் ஈரானும் இன்னும் அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்தவில்லை. இஸ்ரேலும் ஈரானும் போர் நிறுத்தத்துக்கு ஒப்புக்கொண்டதாக பிபிசியின் அமெரிக்க செய்தி கூட்டாளியான சிபிஎஸ்ஸிடம் வெள்ளை மாளிகையின் மூத்த அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

ஆனால், இரு தரப்பினரும் முறையான அல்லது பொது பதிலை வெளியிடவில்லை.

அவரது கூற்றுப்படி, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை ட்ரம்ப் நேரடியாகத் தொடர்பு கொண்டார். ஈரான் இனிமேல் தாக்குதல் நடத்தாத பட்சத்தில் சண்டை நிறுத்தத்துக்குத் தயார் என்று நெதன்யாகு ஒப்புக் கொண்டார் என்று சிபிஎஸ் செய்தி கூறுகிறது.

அந்த செய்தியின் படி, ஈரான் சண்டை நிறுத்தத்துக்கு ஒப்புக் கொண்டதாக மூத்த ஈரானிய அதிகாரிகளும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

அமெரிக்கத் துணை ஜனாதிபதி ஜே.டி. வான்ஸ், வெளியுறவுச் செயலாளர் மார்கோ ரூபியோ மற்றும் சிறப்புத் தூதர் ஸ்டீவ் விட்காஃப் ஆகியோர் ஈரானியர்களுடன் நேரடி மற்றும் மறைமுக வழிகள் மூலம் தொடர்பு கொண்ட பிறகு சண்டை நிறுத்தம் ஏற்பட்டதாக அந்த மூத்த அதிகாரி கூறியுள்ளார்.

(நன்றி பிபிசி தமிழ்)

## 'அணையா விளக்கு' தணியா...

இலங்கை தமிழரசு கட்சியின் ஏற்பாட்டில் நடைபெற்ற "அணையா விளக்கு" போராட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், ஞா.சிறிநேசன், இ.சிறிநாத், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.கோடீஸ்வரன், மாநகர சபை மற்றும் பிரதேச சபைகளின் தவிசாளர்கள், கட்சியின் உறுப்பினர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

அணையா விளக்கு போராட்டத்தில் பதாதைகளை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் பேரணியாக நடந்து சென்று பின்னர் பாலத்தின் நடுப்பகுதியில் தீப்பந்தங்களை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் ஐ.நா மனித உரிமை ஆணையத்தின் ஆணையாளர், "மனித புதைகுழிகள், இனப்படுபவர்களுக்கு சர்வதேச பொறிமுறையின் ஊடாக நீதியினை பெற்று தர வேண்டும்" என இதன் போது வலியுறுத்தப்பட்டது.

## 'அணையா விளக்கு' அணிதிரள...

காணாமல் போனோர் அலுவலக உருவாக்கமானது சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்கான ஸ்ரீலங்கா அரசின் கண்துடைப்பு நடவடிக்கையே என்பதனை அந்த அமைப்பின் செயற்பாடுகள் நிரூபித்துள்ளது.

இவ் அலுவலகமானது உண்மை,நீதி,மற்றும் பொறுப்புக்கூறலுக்கான வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் நடைமுறைத் தேடலைத் தாமதப்படுத்துகின்றது. நீதி மற்றும் பொறுப்புக்கூறல் தாமதத்தின் விளைவாக குற்றமிழைத்த அவர்களுக்குத் தண்டனை வழங்கப்படாமையால், வலிந்து காணாமல் ஆக்குவதற்கான தலைமையை வழங்கியவர்களும் அதற்கான சித்தாந்த ரீதியான ஆதரவு வழங்கியோரும் இலங்கையின் ஆட்சி அதிகாரத்தில் அமரக் கூடியதாகவும் சுதந்திரமாக நடமாடக் கூடியதாகவும் உள்ளது.

ஸ்ரீலங்காவின் நீதித் துறையும் காவல் துறையும் இனவாதமும் மதவாதமும் நிறைந்ததாகவும், அரசியல் மயப்பட்டதாகவும் நம்பகத்தன்மை இழந்தும் காணப்படுகின்றது. அதே வேளை இக் குற்றங்களுடன் தொடர்புடைய ஸ்ரீலங்காவின் ஆயுதப்படை தளபதிகள் மற்றும் உளவுப்பிரிவின் அதிகாரிகளுக்குப் பதவி உயர்வுகள்,வெகுமதிகளும் அளிக்கப்பட்டுள்ளன.

அனைத்து நபர்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேச மாநாட்டில் (ICPPED) குறிப்பிடப்பட்ட - தெரிந்து கொள்ளும் உரிமை,நீதிக்கான உரிமை, இழப்பீடு பெறுவதற்கான உரிமை,குற்றங்கள் மீண்டும் நிகழாமல் இருப்பதற்கான உத்தரவாதம் போன்றவை தமிழர்களுக்கு வெற்று வார்த்தைகளாகவே இன்றும் உள்ளன.

உண்மை,நீதி,மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பாக நீண்ட கால தேடலுடன் போராட்டம் மிகவும் வேதனையானதாகும். தமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கோரி போராடும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள், ஸ்ரீலங்காவின் உளவுத் துறையினரால் கண்காணிக்கப்பட்டு, இராணுவத்தினராலும் அவர்களுக்குத் துணைபோகும் பொலிஸாரால் மிரட்டல் மற்றும் துன்புறுத்தல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைத் தேடி நீதி கோரிய போராட்டத்துடன் இணைந்திருந்த சுமார் 80 க்கும் அதிகமானவர்கள்,தங்கள் உறவுகளின் உண்மை நிலையை அறியாமலேயே மரணமடைந்துள்ளார் கள்.

2015ஆம் ஆண்டில் இலங்கை கையெழுத்திட்ட - அனைத்து நபர்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேச மாநாட்டில் 24 வது பிரிவு,காணாமல் போன நபரை மட்டுமல்ல,வலிந்து காணாமல் ஆக்கப்பட்டதன் விளைவாகப் பாதிக்கப்பட்ட அனைத்து நபர்களையும் பாதிக்கப்பட்டவர்களாக வரையறுக்கிறது.

போர் முடிவடைந்து 16 வருடங்களாகியும் ஸ்ரீலங்காவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமையால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான - பொறுப்புக்கூறல் இல்லாமை மற்றும் தண்டனை இன்மையால் பாதிக்கப்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கிடைக்கவில்லை. இதனால்,இந்த குற்றங்களுக்கானபொறுப்புக்கூறலுக்காக இலங்கையைச் சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் மூலமாகவோ அல்லது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினூடாக விசாரிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் இலங்கைக்கு வருகை தந்துள்ள நிலையில் - தமிழ் மக்கள் மீதான இனவழிப்புக்கு சர்வதேச குற்றவியல் விசாரணையை வலியுறுத்தி அணையாவிளக்கு என்னும் பெயரில் சர்வதேசத்திடம் நீதிகோரும் போராட்டம் ;மக்கள் செயல்'என்னும் தன்னார்வ இளையோர் அமைப்பினால் யாழ் செம்மணிவளைவுப் பகுதியில் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

தமிழின அழிப்புக்கு பக்கச்சார் பற்ற சர்வதேச விசாரணையை முன்னெடுக்கவும் சர்வதேச குற்றவியில் நீதிமன்றுக்கு இலங்கையின் பொறுப்புக்கூறல் விவகாரத்தை பாரப்படுத்த ஐ.நா மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தும் வகையில் மேற்கொள்ளப்படும் இந்தப் போராட்டத்துக்கு தமிழ் மக்கள் அணிதிரள வேண்டும் என்று அழைப்புவிடுக்கின்றோம். குறிப்பாக புதன்கிழமை(25) அன்று காலையில் 'மக்கள் செயல்'; அழைப்பின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள பேரணிக்கும் பேராதரவு வழங்கி கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றோம் .

## '119' இல் தவறு இழைக்காதீர்கள்




அதிகாரிகளின் உடனடி உதவி தேவைப்பட்டால் உடனடியாக பொலிஸ் அதிகாரிகளை பணியமர்த்தும் நோக்கில் 2004 ஆம் ஆண்டு காவல்துறை அவசர தொலைபேசி எண் 119 அறிமுகப்படுத்தப்பட்டது என்று இலங்கை பொலிஸ் தெரிவித்துள்ளது.

இருப்பினும், இந்த தொலைபேசி இலக்கத்திற்கு அண்மையில் வந்த அழைப்புகளைப் பொறுத்தவரை, போலி முறைப்பாடுகளை அளிப்பதன் மூலமும், பொலிஸாரினால் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டிய முறைப்பாடுகளைத் தவிர, பிற உடனடி சேவைகளுக்கு அனுப்ப வேண்டிய முறைப்பாடுகளை அளிப்பதன் மூலமும் இந்த சேவை தவறாகப் பயன்படுத்தப்படும் சம்பவங்கள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுபோன்ற பொய்யான முறைப்பாடுகள் பதிவு செய்யும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தெரிவித்துள்ளது.

மேலும், இந்த சேவை தவறாகப் பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களில், அத்தகைய தொலைபேசி எண்ணிலிருந்து 119 ஹாட்லைன் மையத்திற்கு வரும் அழைப்புகளை தற்காலிகமாக நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## சிக்கலில் ஷிரந்தி

'சிரிலிய சவிய' என்ற தலைப்பில் அவரது பெயரில் ஒரு போலி கணக்கு திறக்கப்பட்டதாகவும், 'சிரிலிய' அமைப்பின் வங்கிக் கணக்குகள் தொடர்பான ஆணை படிவம் வங்கியிலிருந்து மோசடியாக நீக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது, தற்போது இடைநிறுத்தப்பட்ட இந்தக் கணக்கு, 2006நவம்பர் 14, அன்று, கொழும்பு 10, டார்லி சாலையில் உள்ள சுதுவெல்ல கிளையில், மக்கள் வங்கியில் திறக்கப்பட்டது. ஷிரந்தி ராஜபக்ஷ கணக்கின் தலைவராக பட்டியலிடப்பட்டுள்ளார்.

கல்யாணி திசாநாயக்க செயலாளராகவும், நிரோஷா ஜீவனி பொருளாளராகவும் உள்ளனர். இந்தக் கணக்கில் தற்போது ரூ.43 மில்லியன் இருப்பு உள்ளது. பதிவுகள் 82,900,088 ரூபாய் டெபாசிட் செய்யப்பட்டுள்ளது. அதே நேரத்தில், 39,015,656 ரூபாய் திரும்பப் பெறப்பட்டுள்ளது.

கூடுதலாக, 'சிரிலிய' என்ற பெயரில் ரூ.10 மில்லியன் நிலையான வைப்புத் தொகை திறக்கப்பட்டுள்ளது.

நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு (FCID) இந்த விவகாரம் குறித்து மீண்டும் விசாரணைகளை தொடங்கியுள்ளது.

ராஜபக்ஷ குடும்பத்தினர் சம்பந்தப்பட்ட பல சந்தேகத்திற்குரிய நிதி பரிவர்த்தனைகளையும் பிரதி அமைச்சர் குறிப்பிட்டார்.

அதாவது, CSN (கார்ல்டன் ஸ்போர்ட்ஸ் நெட்வொர்க்) திறைசேரியிலிருந்து பெற்றதாகக் கூறப்படும் ரூ.152 மில்லியன். தனது பெற்றோருக்கு நினைவுச்சின்னம் கட்டுவதற்காக நகர மேம்பாட்டு அதிகாரசபையிடமிருந்து கோட்டாபய ராஜபக்ச பெற்ற ரூ.35 மில்லியன். அத்துடன், மல்வானாவில் ஒரு வீட்டை வாங்க பசில் ராஜபக்ஷ ரூ.208 மில்லியன் பயன்படுத்தினார்.



## பகிடிவதை செய்த...

பொறியியல் பீடத்தைச் சேர்ந்த இரண்டாம் ஆண்டு மாணவர்கள் குழு ஒன்று ,முதலாம் ஆண்டு மாணவர்களை பகிடிவதை செய்துள்ளதுடன் இது தொடர்பான விசாரணையின் அடிப்படையில் கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பல்கலைக்கழக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பரந்தன் கெமிக்கல்ஸ்...

அதற்கமைய ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் (ETF) தலைவராக சோமசிறி ஏக்கநாயக்க, இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் தலைவராக பீ.ஏ.பி. கே.ஆர். பமுணு ஆரச்சி, அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவராக எம். ஆர்.எச். சுவர்ணதிலக்க மற்றும் பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பனியின் தலைவராக எஸ். நேசராஜன் ஆகியோரின் நியமனங்களுக்கு உயர் பதவிகள் பற்றிய குழுவின் அனுமதி வழங்கப்பட்டது.

## "OR மற்றும் ONUR க்கு...

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரை வரவேற்ற பிரதமர், மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்துடன் (OHCHR) பயனுள்ள விதத்திலும் ஒத்துழைப்புடனும் செயற்படுவதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தினார்.

சமீபத்தில் இலங்கை அரசியல் ஏற்பட்ட மாற்றம் குறித்து குறிப்பிட்ட அவர், அனைத்து சமூகங்களிடமிருந்தும் கிடைக்கப்பெற்ற வரலாற்று முக்கியத்துவம் மிக்க மக்கள் ஆணையானது இலங்கையின் அரசியல் கலாச்சாரத்தில் குறிப்பிடத்தக்க மாற்றத்தைப் பிரதிபலிக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

கிராமப்புற வறுமையை ஒழித்தல், டிஜிட்டல் மயமாக்கலை முன்னெடுத்தல் மற்றும் தேவையான சமூக மாற்றத்தைப் போன்றே நிறுவன ரீதியிலான மாற்றங்களுடன் சட்ட மற்றும் அரசியல் சீர்திருத்தங்களைப் பின்பற்றுதல்.ஆகிய மூன்று முக்கிய காரணிகளில் அரசாங்கத்தின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்பதை பிரதமர் சுட்டிக்காட்டினார்.

சமூக, கல்வி, சுகாதார மற்றும் பொருளாதார உரிமைகள் உள்ளிட்ட மனித உரிமைகளின் முழுமையான கட்டமைப்பைப் பாதுகாத்து மேம்படுத்துவதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகின்றது என்றும் பிரதமர் தெரிவித்தார்.

காணாமல் போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம்(OR) மற்றும் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம் (ONUR) போன்ற உள்நாட்டு இயங்குதளங்களை வலுப்படுத்துவதன் மூலம் இந்த செயல்முறைக்கு ஆதரவளிக்கப்படும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

## தொட்டாச் சுருங்கி காணியை...

இச் சந்திப்பு அம்பாறை மாவட்ட செயலகத்தில் ஞாயிற்றுக்கிழமை (22) அன்று நடைபெற்றது.

உரிய ஆவணங்களைப் பார்வையிட்ட அவர் முறையாக சகல ஆவணங்களையும் திரட்டி முழுமையான அறிக்கையைக் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் நந்தலால் ரத்னசேகரவிற்கு சமர்ப்பிப்பதாக உறுதியளித்தார்.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அங்கு கூறுகையில்..

தமது வயல் காணிகளை இழந்த நிலையில், அம்பாறை, மல்வத்தை உள்ளிட்ட சில கிராமங்களைச் சேர்ந்த 70 இற்கு மேற்பட்ட தமிழ் விவசாய குடும்பங்கள் தமக்கான நீதி மறுக்கப்பட்ட நிலையில் கண்ணீருடன் தாம்35 வருடங்களாக வாழ்ந்து வருகிறோம்.

அம்பாறை, மல்வத்தை விவசாய கமநல சேவை பிரிவிற்குட்பட்ட தொட்டாச்சுருங்கி விவசாயக் கண்ட காணியைக் கடந்த 35 வருடங்களுக்கு முன்னர் சகோதர பெரும்பான்மை இனத்தவர்களால் இவ்வாறு கபளீகரம் செய்யப்பட்டு தம்மை விவசாயம் செய்ய விடாமல் எந்த வித காணி ஆவணங்களும் இன்றி அவர்களே விவசாயம் செய்து வருவதாகவும், தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

குறித்த கண்டத்தில் 402 ஏக்கர் வயல் நிலங்கள் இருந்ததாகவும் அதில் 180 ஏக்கர் வரை தற்போது செய்கை பண்ணப்பட்டு வரும் நிலையில், 164 ஏக்கர் விவசாய நிலத்திற்கு சொந்தக்காரர்களான 70 இற்கு மேற்பட்ட தமிழ் குடும்பங்களைச் சேர்ந்தவர்களை பெரும்பான்மை சகோதர இனத்தவர்கள் செய்கை பண்ண விடாமல் தாமே விவசாயத்தை மேற்கொண்டு வருவதுடன், அரச அதிகாரிகளும் அவர்களுக்கு ஆதரவு வழங்கும் வண்ணம் செயற்படுவது தமக்கு இழைக்கப்படும் அநீதியாகவே தாம் பார்க்கிறோம்.என்று கூறினர். தொட்டாச் சுருங்கி கண்டம் ஆரம்பக் காலத்தில் சம்மாந்துறை பிரதேச செயலக எல்லைக்குட்பட்டதாக இருந்த நிலையில் தற்போது உகனை பிரதேச செயலகத்திற்குரிய காணியென அதிகாரிகள் கூறுவது தமக்கு ஆச்சரியமாக இருப்பதாகவும், இதற்கு மாவட்ட செயலகமும் உடந்தையாக இருப்பதாகவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.










# ‘அணையா விளக்கு’ ஆர்ப்பாட்டம்

■ நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணம், செம்மணி படுகொலைக்கு நீதி கோரி முன்னெடுக்கப்பட்டு வருகின்ற ‘அணையா விளக்கு’ ஆர்ப்பாட்டம் செவ்வாய்க்கிழமை (24) அன்று இரண்டாவது நாளாகவும் உணர்வெழுச்சியாக நடைபெற்றது.

மக்கள் செயல் அமைப்பின் ஏற்பாட்டில் அணையா விளக்கு எனும் தொனிப் பொருளில் சர்வதேச நீதி கோரி திங்கட்கிழமை(23) ஆர்ப்பாட்டம் ஆரம்பிக்கப்பட்டு முதல் நாளில் பகல் இரவாக நடைபெற்றது.

இப்போராட்டத்தில் மதத் தலைவர்கள், பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகள், பொதுமக்கள் எனப் பெருமளவிலானோர் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இறுதி நாள் போராட்டமாக இன்று புதன்கிழமை (25) அன்று நடைபெறவுள்ள இப்போராட்டத்தில் வடக்கு கிழக்கில் இருந்து பெருமளவிலானோர் கலந்து கொள்ள உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



## மனிதப் புதைகுழிகளின்

# சூத்திரதாரிகள் யார்?

■ நிதர்ஷன் வினோத்

“வடக்கு கிழக்கில் காணப்படும் அனைத்து மனிதப் புதைகுழிகள் தொடர்பாகவும் நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு சூத்திரதாரிகள் யார் என்பது வெளிப்படுத்தப்பட வேண்டும்” என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகச் செயலாளர் ஸ்ரீகாந்த் பன்னீர்செல்வம் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், கடந்த காலங்களில் எமது மக்கள் எதிர்கொண்ட இவ்வாறான அவலங்கள் பற்றிய உண்மைகள் வெளிப்படுத்தப்படாமல் இருப்பதால், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கு எதிராக அவை பயன்படுத்தப்படுவதாகவும், செம்மணி புதைகுழி தொடர்பில் நீதியான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதை ஈ.பி.டி.பி. தொடர்ச்சியாக வலியுறுத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக மையத்தில் செவ்வாய்க்கிழமை(24) அன்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே இதனைத் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், “பெரும்பாலான உள்ளூராட்சி சபைகள் அமைக்கும் பணிகள் நிறைவடைந்திருக்கின்றன. உள்ளூராட்சி சபைகளை அமைப்பது பற்றிய எமது நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, தமிழ் அரசியல் பரப்பிலும் சமூக ஊடகங்கள் மத்தியிலும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியும் எமது செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ் தேவானந்தா பேசுபொருளாக மாறியிருந்தார்.

இதனால் அண்மைக் காலத்தில் ஊடக நேர்காணல்களை அவதானிப்பீர்களாயின், அதில் கலந்து கொள்கின்ற அரசியல்வாதிகளும் சரி, பாராளுமன்றில் சிறப்புரிமைகளுக்குள் பதுங்கி நின்று பேசுகிறவர்களும் சரி, தோழர் டக்ளஸ் தேவானந்தாவின் பெயரை உச்சரிப்பதற்கு மறப்பதில்லை. அதேபோன்று, சமூக ஊடகங்களிலும் பார்ப்போமானால், அவர்களுடைய புரோமக்கள் என்று சொல்லப்படுகின்ற முன்னோட்ட காணொளிகளில் தோழர் டக்ளஸ் தேவானந்தா தொடர்பாக சொல்லப்படுகின்ற கருத்துக்களுக்கு இடம் கொடுக்கப்படுகிறது.

இவ்வாறான நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன், 90ஆம் ஆண்டு காலப் பகுதியில் மண்டைதீவில் இடம்பெற்றதாகக் கூறப்படும் படுகொலைகள் மற்றும் காணாமல் போனமை போன்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக எமது தலைமையை விசாரிக்க வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.




பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனை பொறுத்தவரையில் அவர் செயற்பாடுகள் குறுகிய சுயநலன் சார்ந்தவை. மக்களுக்கு அவலங்களை ஏற்படுத்தி அந்த அவலங்களுக்கு எதிராக குரல் கொடுக்கின்ற ஒருவாராகத் தன்னை வெளிப்படுத்துவதன் மூலம், தன்னுடைய அரசியலைப் பாதுகாத்துக் கொள்ளுகின்ற ஒருவர். அவரின் அரசியல் சீத்தவத்தை பேசுவதென்றால், நீண்ட நேரம் பேச முடியும்.

இப்பொழுது மண்டைதீவு விவகாரத்தில் அக்கறை கொள்ளுகின்ற ஸ்ரீதரன் எம்பி, நல்லாட்சி காலத்தில் என்ன செய்து கொண்டிருந்தார்? உண்மையில் மண்டைதீவு விவகாரத்தில் அக்கறை உள்ள ஒருவராக இருந்திருந்தால், தாங்கள் இதயத்தினால் இணைந்திருந்த நல்லாட்சி காலத்தில் விசாரணைகளை மேற்கொண்டு உண்மைகளைக் கண்டறிந்திருக்க வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பரிகாரம் அளித்திருக்க வேண்டும். ஆனால் நல்லாட்சி காலத்தில் குறித்த விவகாரத்தில் எந்த ஒரு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

ஆக, தற்போது மண்டைதீவு பற்றி கதைப்பது அரசியல் நோக்கம் கொண்டுள்ளது வெளிப்படையாகத் தெரிகிறது. இதனை புரிந்து கொண்ட நீதியமைச்சர், வெறுமனே அரசியல் நோக்கங்களின் அடிப்படையில் கருத்துக்களை முன்வைக்காது ஆதாரங்களுடன் முறைப்பாடுகளைப் பதிவு செய்யுங்கள் என்று கூறியிருக்கிறார்.

இவ்வாறான நிலையில், செம்மணி பகுதியில் சித்தும்பாத்தி மயானத்தில் எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. அதன் அடிப்படையில் அணையா விளக்குகள் என்ற தொனிப் பொருளில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

செம்மணி பகுதியில் மனித எலும்புக்கூடுகள் மீட்கப்படுவது ஆச்சரியமான விடயமல்ல. கிருஷாந்தி படுகொலை வழக்கில் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டவர்கள், செம்மணி பகுதியில் சுமார் 600க்கும் மேற்பட்டவர்கள் கொலை செய்து பாதிக்கப்பட்டிருப்பதாக வாக்குமூலம் அளித்திருக்கின்றனர்.

1996ஆம் ஆண்டு கிருஷாந்தி விவகாரத்தை மூடி மறைப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், குறித்த விவகாரத்தினை பாராளுமன்றில் பேசுபொருளாக்கியதன் மூலமும், சர்வதேச மன்னிப்பு சபை போன்ற மனித உரிமை அமைப்புகளின் அக்கறைக்குரிய விடமாக மாற்றி, அப்போதைய அரசாங்கத்திற்கு அழுத்தத்தை ஏற்படுத்தி இருந்தோம்.

பின்னர், செம்மணியில் வெளிப்படையாக அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு, உரிய விசாரணைகளை முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி எமது ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிடப்பட்ட கடிதம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன், அது தொடர்பாக சர்வதேச நாடுகளின் இராஜதந்திர மட்டங்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையில் தற்போது, செம்மணி உட்பட மனிதப் புதைகுழிகள் இருப்பதாக சந்தேகப்படுகின்ற அனைத்து இடங்களிலும் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு, மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்படுமாயின், அவை தொடர்பாக சுயாதீனமான நீதி விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு அவை எந்தக் காலப் பகுதியில் புதைக்கப்பட்டன, அவற்றுடன் சம்பந்தப்பட்டவர்கள் யார்? போன்ற விடயங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாக இருக்கிறது.

இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் விசாரிக்கப்படாமல் இருக்கின்றமையால், ஈ.பி.டி.பி கட்சியின் அரசியல் நிலைப்பாட்டின் நியாயங்களையும் எம்மால் முன்னெடுக்கப்பட மக்கள் நலன்சார்ந்த வேலைத் திட்டங்களையும் விமர்சிக்கத் திராணியற்ற. அரசியலில் தமது அவசியத்தை மக்களுக்கு எடுத்துச் செல்ல முடியாத ஆசாமிகளும் தம்மை நிலைநிறுத்த எம் மீதான போலியான குற்றச்சாட்டுகளை சுமத்துவதற்கு இவ்வாறான விவகாரங்கள் இலகுவாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர்" என்று தெரிவித்தார்.

## கினிகத்ஹேன – நோட்டன் பிரிட்ஜ்

# வீதி மீண்டும் திறக்கப்பட்டது

■ ரஞ்சித் ராஜபக்ஷ



கினிகத்ஹேன-நோட்டன்பிரிட்ஜ் வீதி செவ்வாய்க்கிழமை(24) முதல் மீண்டும் திறக்கப்பட்டுள்ளதாக நோர்வூட் வீதி மேம்பாட்டு அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

களனி நதியில் நீர் பாயும் லோனாக் அட்லிஸ் பகுதியில் உள்ள கால்வாயின் குறுக்கே கட்டப்பட்ட வீதி, மூழ்கும் அபாயத்தில் இருந்ததால், கடந்த 14ஆம் திகதி முதல் வீதி தற்காலிகமாக மூடப்பட்டு, அந்த இடத்தில் ஒரு இரும்பு பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நோர்வூட் வீதி மேம்பாட்டு அலுவலகத்தால் செவ்வாய்க்கிழமை (24) முதல் வீதியை வாகனப் போக்குவரத்திற்கு மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பாலத்தை நிர்மாணிக்க நெடுஞ்சாலைகள் அமைச்சகம் நிதி ஒதுக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கஞ்சாவுடன் ஒருவர் கைது



முல்லைத்தீவு, திருமுறிகண்டி பகுதியில் திங்கட்கிழமை (23) அன்று கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி, இரணைமடு விமானப்படையின் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், மாங்குளம் பொலிஸ் நிலைய சிறப்புப் படை அதிகாரிகளால், திருமுருகண்டி பகுதியில் நடத்திச் சென்ற ஒரு இனிப்புக் கடையைச் சோதனையிட்ட போது, கஞ்சா தொகையைக் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்ட நபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.









## சூத்திரதாரிகள் யார்?

# இ.தொ.கா உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் பதவி பிரமாணம்

2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சேவல் சின்னத்தில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக போட்டியிட்டு நுவரெலியா மாவட்டத்தில் நுவரெலியா மாநகர சபை, நுவரெலியா பிரதேச சபை, அக்கரபத்தனை பிரதேச சபை, கொட்டகலை பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் திங்கட்கிழமை(23) அன்று பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

இதன் அடிப்படையில், நுவரெலியா மாநகர சபையின் பிரதி மேயராக இ.தொ.காவின் சிவன்ஜோதி யோகராஜ், நுவரெலியா பிரதேச சபை தவிசாளராக வேலு யோகராஜ், அக்கரபத்தனை பிரதேச சபை தவிசாளராக ரதிதேவி, கொட்டகலை பிரதேச சபையின் தவிசாளராக ராஜமணி பிரசாத் ஆகியோர் உத்தியோகப்பூர்வமாக தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டனர்.

அவர்கள், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், இ.தொ. கா. பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான், முன்னிலையில் பதவி ஏற்கும் பத்திரத்தில் கையெழுத்திட்டு, உள்ளூராட்சி மன்றம் செயலாளர்களிடம் பத்திரத்தைச் சமர்ப்பித்தனர்.

இந்நிகழ்வில், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், இ.தொ. கா பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான், தலைவர் செந்தில் தொண்டமான், நிதிச்செயலாளரும் தவிசாளருமான மருதபாண்டி ராமேஸ்வரன், பிரதி தலைவர் கணபதி கனகராஜ், பிரதி தவிசாளர் ராஜதுரை, உள்ளூராட்சி மன்றம் செயலாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் இ.தொ.காவின் முக்கியஸ்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# மூன்றாம் உலக போர் பதற்றத்தை தணித்த போர் நிறுத்தம்

மத்திய கிழக்கில் நடந்து வரும் போரில் அமெரிக்கா ஈடுபட்டதால், மிகவும் சிக்கலான சூழ்நிலை உருவாகியுள்ளது. அந்த சிக்கலை அமெரிக்காவே தீர்த்துள்ளமை வரவேற்கத்தக்கது. தற்போதைய போர்நிறுத்தம், தற்காலிகமானதாக இல்லாமல், போரையே நிறுத்துவதாக அமையவேண்டும் என்பதே பெரும்பாலானவர்களின் எதிர்பார்ப்பு.

ஈரானில் உள்ள மூன்று அணுசக்தி நிலையங்களைத் தாக்கி அழித்ததாக அமெரிக்கா அறிவித்தது. இவை உண்மையில் அணுசக்தி நிலையங்களாக இருந்தால், அணுசக்திப் பொருட்களின் கசிவு ஈரான் மக்களுக்கும் ஈரானின் சுற்றுச்சூழலுக்கும் பெரும் சேதத்தை ஏற்படுத்தியிருக்கும் ஈரானில் அணுமின் நிலையங்கள் இல்லை என்று சர்வதேச அணுசக்தி நிறுவனம் கூறியுள்ளது. ஆனால், ஈரானில் அணுமின் நிலையங்கள் இருப்பதாக அமெரிக்கா வலியுறுத்துகிறது. முதல் பார்வையில், இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையிலான போர் ஒரு விஷயம். அமெரிக்கா ஈரானைத் தாக்குவது வேறு. இந்த விஷயத்தில் பழிவாங்கும் தாக்குதல்கள் இன்னும் தொடங்கவில்லை.

எனினும், தகுந்த நேரத்தில் அமெரிக்கா மீது தாக்குதல்களை நடத்துவோம் என ஈரான் எச்சரித்துள்ளது.

இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்கா ஈரானைத் தாக்கியதா அல்லது ஈரானைக் கட்டுப்படுத்தும் அதன் நீண்டகால இலக்கை நிறைவேற்றுவதா என்பது தெளிவாகத் தெரியவில்லை. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பொதுவாக, போர் எதிர்ப்பு நபராக அறியப்படுகிறார்.

முதன்முறையாக அமெரிக்க ஜனாதிபதியானவுடன், ஆப்கானிஸ்தானிலிருந்து அனைத்து அமெரிக்கத் துருப்புக்களையும் திரும்பப் பெற டிரம்ப் நடவடிக்கை எடுத்தார். அதன்படி, மீண்டும் அந்த வெற்றிடத்தை நிரப்ப தலிபான் அமைப்பு வந்தது, இன்று ஆப்கானிஸ்தான் தாலிபான் அரசாங்கத்தால் ஆளப்படுகிறது.

ஈரான் ஒரு ஆபத்தான அரசாங்கம் என்ற கருத்து அமெரிக்காவில் உள்ளது. சிரியாவும் ஏமனும் மோசமான நாடுகள் என்றும் அமெரிக்கா நம்புகிறது.

இந்த இரண்டு நாடுகளும் அமெரிக்காவிற்கு அடிபணியவில்லை. அமெரிக்கா ஈரானைத் தாக்கினால் செங்கடல் வழியாகப் பயணிக்கும் அமெரிக்க கப்பல்களைத் தாக்குவோம் என்று ஏமனின் ஹவுத்திகள் கூறியுள்ளனர். இது நடக்க வாய்ப்புள்ளது.

இதற்கிடையில், அமெரிக்கத் தாக்குதல்களுக்குப் பதிலடியாக ஹார்முஸ் ஜலசந்தியை மூடுவதாக ஈரான் அச்சுறுத்தியுள்ளது. இந்த ஜலசந்தி மிகவும் முக்கியமானது. ஈரான் மற்றும் சுற்றியுள்ள இஸ்லாமிய நாடுகளிலிருந்து எண்ணெய் ஹார்முஸ் ஜலசந்தி வழியாக உலகின் பிற நாடுகளுக்குக் கொண்டு செல்லப்படுகிறது. இந்த ஜலசந்தி மூடப்பட்டால், எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகள் எண்ணெய் விநியோகிக்க நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருக்கும். பின்னர் எப்படியும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படும் எண்ணெய் விலை இன்னும் அதிகரிக்கும்.

எனினும், போர்நிறுத்த அறிவிப்பை மனித நேயத்தை விரும்பும் அனைவராலும் வரவேற்கப்படுகின்றது. அதில் மாற்றுகருத்துக்கு இடமில்லை. ஆகையால், போர்நிறுத்தத்தை எந்த தரப்பினரும் மீறிவிடாமல் இருப்பதே, அடுத்த யுத்தம் ஆரம்பிக்காமல் இருப்பதற்காக வைக்கப்படும் முற்றுப்புள்ளியாகும்.



தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




எம்.எஸ்.எம்.ஐயூப்

# ஊழல் பேர்வழிகளோடு சேர்ந்து ஊழலை ஒழிக்க முடியுமா?

தாமே திருடர்கள் என்று திட்டிய கட்சிகளின் உறுப்பினர்களுடன் கூட்டுச் சேர்ந்து உள்ளூராட்சி மன்றங்களில் அதிகாரத்தைக் கைப்பற்றத் தேசிய மக்கள் சக்தி முன்வந்துள்ளதையிட்டு அக்கட்சியை ஏனைய கட்சிகளைச் சேர்ந்த பலர் விமர்சிக்கின்றனர்.

ஆனால், அவ்விடயத்தில் தேசிய மக்கள் சக்தியை விமர்சிக்க எந்தவொரு கட்சிக்கும் தார்மிக உரிமை இல்லை. ஏனெனில், அவ்வனைத்துக் கட்சிகளும் இது வரை அவ்வாறு ஏனைய கட்சிகளுடன் கூட்டுச் சேர தயாராகவே இருந்து வந்துள்ளன. இப்போதும் ஏனைய கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தைக் கைப்பற்றி வருகின்றன.

ஆயினும், தேசிய மக்கள் சக்தி அவ்வாறு கூட்டு சேர்வதையிட்டு அக்கட்சிக்கு வாக்களித்த பொது மக்கள் கேள்வி எழுப்புவதில் நியாயம் இருக்கிறது. அவ்விடயத்தில் மக்கள் எழுப்பும் கேள்விகளுக்கு அக்கட்சித் தலைவர்கள் இது வரை திருப்திகரமாக பதிலளிக்கவில்லை என்பதே இங்குள்ள பிரச்சினையாகும்.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியோடு எவ்வித அரசியல் கூட்டும் வைத்துக்கொள்வதில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் எத்தனை முறை கூறினார்? ஐ.ம.சவும் ஐக்கிய தேசிய கட்சியும் ஒன்று சேர்ந்து பொதுத் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்று அவ்விரு கட்சிகளைச் சேர்ந்த பலர் பொதுத் தேர்தலுக்கு முன்னர் வலியுறுத்திக் கூறினர். ஆனால், அவ்விரு கட்சித் தலைவர்களும் அதற்குச் செவிசாய்க்கவில்லை.

கடந்த செப்டெம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த தமிழ் கட்சிகள் அனைத்தும் ஏதாவது ஒரு நிலைப்பாட்டைப் பின்பற்ற வேண்டும் என்று அம்மாகாணங்களில் பலர் கூறினர். ஆயினும், தமிழ் கட்சிகள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. சிலர் தமிழ் வேட்பாளர் ஒருவரைப் போட்டியில் நிறுத்தினர். இலங்கை தமிழரசுக் கட்சி சஜித் பிரேமதாசவை ஆதரித்தது. தமிழ் கட்சிகள் ஒன்றையொன்று எதிர்த்துப் போட்டியிட்டன.

இவ்வாறு பிரிந்து செயல்படுவதை நியாயப்படுத்த இக்கட்சிகள் மற்றைய கட்சிகளை மிக மோசமாக விமர்சித்தன. சஜித் 2015ஆம் ஆண்டு இடம்பெற்ற மத்திய வங்கி பிணைமுறி ஊழலை காட்டி ஐ.தே.க. தலைவர்களை ஊழல் பேர்வழிகள் என்றார். பொதுஜன முன்னணியைக் கள்ளர் கூட்டம் என்றார். இதேபோல் சில தமிழ் கட்சிகள் வேறு சில தமிழ் கட்சிகளைத் துரோகிகள் என்றும் வர்ணித்தன.

ஆனால், இப்போது உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியை நிறுவும் போது அவற்றில் எந்தக் கட்சியும் எந்தக் கட்சியோடும் கூட்டுச் சேர தயங்கவில்லை. கொழும்பு மாநகர சபையின் அதிகாரத்தைக் கைப்பற்ற ஐ.ம.ச., ஐ.தே.க., பொதுஜன முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் போன்ற சகல கட்சிகளும் ஒன்று சேர்ந்தன. சில இடங்களில் இக்கட்சிகள் தேசிய மக்கள் சக்தியுடனும் ஒன்று சேர்ந்துள்ளன.

தமிழ் கட்சிகள் கடந்த காலங்களில் ஒன்று சேர்வதும் பிரிந்து செல்வதுமாகவே இருந்துள்ளன. யாழ்ப்பாண மாநகர சபையின் அதிகாரத்தைக் கைப்பற்றத் தமிழரசுக் கட்சி இம்முறை டக்லஸ் தேவாநந்தா தலைமையிலான ஈழ மக்கள் ஜனநாயக கட்சியுடன் சேர்ந்தமை எதிர்பாராத ஒன்றாகும். ஏனெனில், ஈ.பி.டி.பி. கட்சி 1990களில் இருந்தே பதவிக்கு வரும் ஒவ்வொரு அரசாங்கத்துடனும் இணைந்து செயற்பட்டுள்ளது. அதேபோல், அக்கட்சி புலிகளுக்கு எதிராக அரச படைகளுக்கு உதவியாகவும் செயற்பட்டுள்ளது. இந்த நிலையில், தேசிய மக்கள் சக்தி உள்ளூராட்சி சபைகளின் அதிகாரத்தைக் கைப்பற்ற ஏனைய கட்சிகளுடன் சேர்வதை விமர்சிக்க இக்கட்சிகளில் எதற்கும் தார்மிக உரிமை இல்லை.

ஆயினும், தேசிய மக்கள் சக்தி ஏனைய கட்சிகளுடன் கூட்டுச் சேர்வதாக இருந்தால் அது ஒரு வித்தியாசமான நிகழ்வாகவே எவரும் கருதுவர். ஏனெனில், அக்கட்சி இது வரை ஏனைய சகல கட்சிகளினது தலைவர்களையும் திருடர்களாகவும் ஊழல் பேர்வழிகளாகவும் தத்தமது இனத்தை அடகு வைத்து அரசியலில் ஈடுபடுவோர்களாகவும் நாட்டு நலனையன்றி தத்தமது சுயநலத்துக்காகவே அரசியலில் ஈடுபடுவோராகவும் சித்திரித்தது.

பல கட்சிகளைப் பொறுத்தவரை அது தவறான கருத்து என்று கூறவும் முடியாது. ஆனால், தேசிய மக்கள் சக்தி தமது வரலாற்றில் கடந்த 60 ஆண்டுகளில் பட்டம் பதவிகளுக்காக அரசியல் கூட்டுகளில் சேரவில்லை.

தேசிய மக்கள் சக்தி என்ற கூட்டமைப்பின் பிரதான கட்சியான மக்கள் விடுதலை முன்னணி கடந்த காலங்களில் சில பிரதான கட்சிகளுடன் கூட்டரசாங்கம் நடத்தியதே என்று சிலர் கேட்கலாம். உண்மை தான். ஆயினும், சில குறிப்பிட்ட நிலைமையின் கீழேயே அக்கட்சி அவ்வாறு செய்துள்ளது. பட்டம் பதவிகளுக்காகத் தாம் எந்தவொரு அரசாங்கத்துடனும் சேரவில்லை என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர்ல்கள் கூறுவதை மறுக்க முடியாது.

உதாரணமாக, 2004ஆம் ஆண்டு மக்கள் விடுதலை முன்னணி ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியுடன் இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற கூட்டமைப்பை உருவாக்கியதை சுட்டிக் காட்டலாம். 2002ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சமாதான பேச்சுவார்த்தைகளிலிருந்து புலிகள் 2003ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஒதுங்கிக்கொண்டனர். அதன் பின்னர் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்காக இடைக்கால நிர்வாக சபையொன்றை நிறுவுவதற்கான திட்டமொன்றை அவ்வமைப்பு முன்வைத்தது.

அதன்படி, வடக்கு கிழக்கு மாகாணங்களின் நிர்வாகம் புலிகளிடம் கையளிக்கப்படும். அதில் எந்தவொரு விடயம் தொடர்பாகவும். மத்திய அரசாங்கம் தலையிட முடியாது. ஆயினும், இடைக்கால நிர்வாக சபையின் செலவுகளுக்காக மத்திய அரசாங்கமே நிதி வழங்க வேண்டும் அந்நிதி தொடர்பான கணக்காய்வுப் பணிகளை இடைக்கால நிர்வாக சபையின் கணக்காய்வு நாயகமே மேற்கொள்வார். அந்நிர்வாக சபைக்கான தேர்தலையும் அச்சபையின் தேர்தல் ஆணையாளரே நடத்துவார்.

அதன் பிரகாரம் இடைக்கால நிர்வாகம் என்பது தனி அரசாங்கமாகவே செயற்பட போகிறது என்றும் இதன் மூலம் புலிகள் ஆயுதப் போரின்றி சட்ட பூர்வமாகவே தமிழீழத்தை அடையப் போகிறார்கள் என்றும் மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட பலர் கூறினர்.

ஆயினும் அப்போதைய ஐதேக அரசாங்கம் எப்படியோ புலிகளைப் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வர வேண்டும் என்று புலிகளின் அந்த ஆலோசனை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த இணக்கம் தெரிவித்தது. இந்த நிலையில் இதனைத் தடுக்கவுள்ள ஒரே வழி ஐ.தே.க. அரசாங்கத்தை கவிழ்ப்பதே என்று ம.வி.மு. கருதியது.

ஆனால், தம்மால் அரசாங்கத்தைக் கவிழ்க்க முடியாது என்பதால், அப்போது எதிர்க்கட்சியாக இருந்த ஸ்ரீ.ல.சு.கவுடன் கூட்டணி அமைத்தது. அக்கூட்டணியின் பெயரில் 2004ஆம் ஆண்டு பொதுத் தேர்தலிலும் போட்டியிட்டு ஐ.தே.க. அரசாங்கத்தைக் கவிழ்த்து 41 ஆசனங்களையும் பெற்றது. பின்னர் அரசியல் கருத்து வேறுபாடு காரணமாக 2005ஆம் ஆண்டு அக்கட்சி அரசாங்கத்திலிருந்து விலகியது.

ம.வி.மு. குறிப்பிட்ட காரணமொன்றுக்காக 2010 மற்றும் 2015ஆம் ஆண்டுகளிலும், பிரதான கட்சியொன்றை ஆதரித்தது. 2005ஆம் ஆண்டு பதவிக்கு வந்த மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் 2010ஆம் ஆண்டளவில் மிக மோசமான அளவில் ஊழல்களிலும் படுகொலைகளிலும் ஈடுபட்டது. எனவே, அவர்களது ஆட்சி நீடித்தால் நாடு மிக மோசமான நிலைக்குத் தள்ளப்படும் என்று வாதிட்ட ம.வி.மு. ஆட்சி மாற்றம் ஒன்றுக்காக அவ்வாண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு தெரிவித்தது.


ஆயினும், அந்தத் தேர்தலில் ஆட்சி மாற்றம் ஏற்படவில்லை. எனவே, ம.வி.மு. 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்தது. இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் மவிமு பதவிகளை எதிர்பார்க்கவில்லை. கட்சிகளோடு நேரடியாகக் கூட்டுச் சேரவும் இல்லை. மாறாகக் கவிழ்க்கப்பட வேண்டிய கட்சிக்கு எதிராக போட்டியிடும் பிரதான கட்சியை ஆதரித்தது. எனவே, ம.வி.மு. பட்டம் பதவிகளுக்காக அரசியல் கூட்டுக்களை அமைக்கவோ அவற்றில் சேரவோ இல்லை என்பது உண்மை.

இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் தேசிய மக்கள் சக்தி தேர்தல் நடைபெற்ற 339 சபைகளில் 151 சபைகளில் அருதிப் பெரும்பான்மை பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது. அதாவது ஏனைய சபைகளில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதாக இருந்தால் அதற்காக அக்கட்சி ஏனைய கட்சிகளின் உறுப்பினர்கள் சிலரின் ஆதரவை பெற்றியாக வேண்டும்.

எவருடனும் தாம் சேர்வதில்லை என்ற நிலைப்பாட்டில் இருந்தால் கொழும்பு மாநகர சபை உள்ளிட்ட 188 சபைகளில் அதிகாரம் ஏனைய கட்சிகள் வசமாகிவிடும். அது அரசியல் ரீதியாக மிக மோசமாக இருக்கும் எதிர்க்கட்சிகளின் நிலையை உயர்த்தி விடும். அது அக்கட்சிகள் விரைவில் மீண்டும் தலையை தூக்கக் காரணமாகி விடலாம்.

இதனைத் தடுப்பதே தேசிய மக்கள் சக்தி ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களுடன் கூட்டுச் சேர்ந்ததன் காரணமாக இருந்தாலும், அதனால் அக்கட்சி எதிர்காலத்தில் பெரும் ஆபத்துக்களை எதிர்நோக்க நேரிடலாம். தேசிய மக்கள் சக்தியினர் இது வரை இருந்ததைப் போலவே தொடர்ந்தும் ஊழல்களில் ஈடுபடாமல் இருந்தாலும் அவர்களுடன் இணைந்து சபைகளில் பதவிகளை பெற்ற ஏனைய கட்சிக்காரர்கள் ஊழல்களில் ஈடுபட மாட்டார்கள் என்ற உத்தரவாதத்தை அக்கட்சியால் வழங்க முடியுமா? அக்கட்சிக்காரர்கள் பணம் சம்பாதிப்பதற்காகவே அரசியலில் குதித்தார்கள்.

குறிப்பாக வேறு கட்சிகளின் உறுப்பினர்கள் தவிசாளர் பதவிகளைப் பெற்ற சபைகளில் ஊழல்கள் இடம்பெறாமல் தடுக்க தேசிய மக்கள் சக்தியால் முடியுமா என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது.



## வாழ்வியல் தரிசனம்

மிகப் பெரிய திறமைசாலிகள் கூட, தங்களை வெளிப்படுத்தத் தயங்குகின்றனர். ஆனால், அநேகர் எந்தவொரு விடயத்திலும் தனித்துவம், தகுதி இல்லாமலே போலி விளம்பங்களால் மேடை ஏறுவதுமுண்டு.

சபையில் முதல் வரிசையில் இடம்பிடிக்க பெரும் பிரயத்தனப்படுவார்கள். அது கிடைக்காது விட்டால் சிச் சீ இந்தக் கூட்ட ஒழுங்குமுறை தவறு என சொல்லி வெளியே மெதுவாக நழுவிச் செல்வார்கள்.

போலி கௌரவம் தேடுபவர்களைச் சுற்றி இருப்பவர்கள் தெரிந்து கொள்வார்கள். இந்த உண்மை தெரிந்தும் கூட விடாப்பிடியாக தங்களைக் காட்டிக்கொடுக்க முனைபவர்களை என்ன என்பது?

சிறப்பான செயல்களை எவர் செய்தாலும் அவர்களை ஜனங்கள் புரிந்து கொள்வார்கள்.

உலக ஹேமத்திற்காக ஒரு பங்காளனாக வலிந்து சேவை செய்பவர் தங்களை மேம்படுத்தி, புகழ் தேடவிரும்பமாட்டார்கள். உலகம் பெரிது ஒவ்வொரு பிரஜையும் வேண்டப்பட்டவர்கள்! உலகப் பார்வை தீர்சண்யமானது.

– பருத்தியூர் பால.வைரவநாதன்

## கடிதங்கள்

### நோய்கள் பரவும் அபாயம்

பதுளை நகரின் வடிகால் அமைப்புகளில் தண்ணீர் தேங்கிக் கிடப்பதால், டெங்கு மற்றும் பிற நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

பதுளை பிரதான பேருந்து நிலையத்தில் உள்ள வடிகால், பதுளை விசாக்கா வித்தியாலயத்திற்கு முன்பு மாவட்ட டி.ஐ.ஜி அலுவலகம் மற்றும் பொலிஸ் நிலையத்திற்கிடையில் உள்ள விசாக்கா வீதியில் மற்றும் பதுளை மத்திய வித்தியாலயத்திற்குச் செல்லும் வீதியின் கடிகார கோபுரத்திற்கு அருகில் தனியார் வகுப்புகள் நடைபெறும் வளாகத்தில் அருகில் இந்த சுகாதார கேடு அதிகமாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடிகால் அமைப்புகள் வழியாக நீர் சரியாக வெளியேற்றப்படாமை மற்றும் கழிவுநீர் வடிகால்களில் வெளியேற்றப்படுவதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

தான் சரியாக வடிகால்களை சுத்தம் செய்வதாகவும் நீர் வெளியேற்றப்படாமையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் நகரசபை ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், இது தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச வாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– பாலித்த ஆரியவங்ச

# Pregnancy period



பா.லோகேஸ்வரி,
உளவியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

காலம் மாறிக்கொண்டிருக்கும் இந்த நவீன சமூகத்தில், உடல் நலத்திற்கும், குடும்ப வாழ்விற்கும் அடிப்படையாய் விளங்கும் கரு சுமத்தலின் (கருத்தரிப்பு) முக்கியத்துவம் குறைவாகவே பேசப்படுகிறது. ஆனால், இது பெண்களின் உடல் சுதந்திரம், தாய்மை பொறுப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றுடன் நெருக்கமாகத் தொடர்புடைய ஒரு மகத்தான விவகாரமாக இன்றளவில் பார்க்கப்படுகிறது. மருத்துவ அறிவின் முன்னேற்றங்கள் மனித இன வளர்ச்சியில் புதிய பயணங்களைத் தொடங்க வைத்தாலும், கருத்தரிப்பு தொடர்பான விழிப்புணர்வில் இன்று வரை பரப்ப வேண்டிய அறிவு நிறையவே உள்ளது.

கருத்தரிப்பு என்பது, பாலூட்டிகளில், கருக்கட்டல் நிகழ்வின்போது உருவாகும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அடுத்த சந்ததிக்கான உயிரி, முளைய விருத்தி மூலம் முளையுமாக விருத்தியடைந்து, பின்னர் முதிர்கரு நிலையில், குழந்தை பிறப்புவரை, பெண்களின் இனப்பெருக்க உறுப்பான கருப்பையில் பதிந்து, தாங்கிக் கொள்ளப்படும் நிலையாகும்.

மனிதரில், பருவமடைந்த ஆரோக்கியமான பெண்களுக்குத் தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் சினை முட்டைகள் உற்பத்தியாகும். அந்த கருமுட்டைகள் கருக்கட்டத் தேவையான ஆணினது விந்து கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்தில் அம்முட்டைகளுடன் கருவறை சுவர்களும் சுத்திகரிக்கப்பட்டு கழிவுகளாக வெளியேற்றப்படும். இச்செயற்பாடே மாதவிடாய் எனப்படுகிறது. மாறாக ஆண்-பெண் கலவியினால் சினை முட்டையுடன் ஆணின் விந்து இணையுமாயின் அங்கு கருத்தரிப்பு இடம்பெறுகிறது. ஆண்-பெண் கலவியற்ற செயற்கை முறையாலும், அதாவது வெளிச் சோதனை முறை கருக்கட்டல் அல்லது செயற்கை விந்தூட்டல் மூலமும் பெண் கருத்தரிக்க முடியும்.

கருக்கட்டல் நிகழுமாயின் கருப்பையில் புதிய கருவணு தங்கியதும், இயக்குநீர் செயற்பாடுகளில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக மாதவிடாய் ஏற்படல் தற்காலிகமாகத் தடைப்படும். மாதவிடாயானது 28 நாட்களுக்கு ஒருமுறை நிகழும். இறுதி மாதவிடாய் ஏற்பட்டு 14 நாட்களில் புதிய கருமுட்டை சூலகத்தில் இருந்து வெளிவரும். எனவே இறுதி மாதவிடாய் நிகழ்ந்து 14 நாட்களில், அதாவது 2 கிழமைகளில் கருக்கட்டல் நிகழ்வதற்கான சாத்தியம் ஏற்படுகின்றது. பெண்களில் கருக்கட்டல் நிகழ்ந்து 38 வாரங்களில் பொதுவாக குழந்தை பிறப்பு நிகழும். எனவே, மாதவிடாய் ஒழுங்காக நிகழும் பெண்களில், இறுதி மாதவிடாய் ஆரம்பித்த நாளில் இருந்து 40 கிழமைகளில் குழந்தை பிறப்பு நிகழும். இறுதி மாதவிடாய் வந்த காலத்தைக் கருத்தில் கொண்டே, குழந்தை பிறப்பதற்கான நாள் தீர்மானிக்கப்படுவதனால், இந்தக் காலமே, அதாவது 40 கிழமைகளே முழுமையான கருக்காலம் அல்லது கருத்தரிப்புக் காலம் என கணக்கிடப்படுகின்றது.

## கருத்தரிப்பு செயல்முறை

கருத்தரிப்பு என்பது ஆண் மற்றும் பெண் இனப்பெருக்க உயிரணுக்கள் ஒன்றுசேரும் இயற்கையான அல்லது மருத்துவ முறையான செயலாகும். பொதுவாக, ஆண் சிறுநீர் குழாயிலிருந்து வெளியேறும் விந்து (Sperm) பெண்ணின் கர்ப்பப்பை நோக்கி செல்லும் வழியில் (Fallopian tube) மகப்பேறு முட்டையுடன் (Ovum) இணையும்போது கருத்தரிப்பு நடைபெறும். இந்தச் செயல்முறை தாய்மை மற்றும் இனப் பெருக்கத்திற்கு அடிப்படையாகும். சாதாரண கருத்தரிப்பு முறையில், ஒவ்வொரு மாதமும் பெண் உடலில் ஒரு முட்டை அண்டை (ovary) இல் இருந்து வெளிவந்து, பைப்பின் வழியாகப் பயணிக்கிறது. இது அணுகத்தக்க 12-24 மணி நேரத்துக்குள்



விந்தணுவொன்றுடன் சந்திக்கும்போது, அது கருவாக மாறும். இந்த இணைப்பு Zygote எனப்படும். பிறகு, அது கருப்பையின் (Uterus) சுவரில் உறைந்து வளர்ச்சியடைகிறது.

## கருத்தரிப்புக்கு முக்கியமான கட்டங்கள்

1. முட்டை உருவாகும் கட்டம் (Ovulation)

மாதவிடாய் சுழற்சியின் நடுப்பகுதியில் ஒரு முட்டை, ஒரு அண்டையிலிருந்து வெளியேறும்.

2. விந்தணு நுழைவு

புணர்ச்சி அல்லது செயற்கை விதை நாட்டம் (IUI/IVF) மூலம் விந்தணுக்கள் பெண்ணின் சுழற்சியில் நுழைகின்றன.

3. கருவாக மாறுதல் (Fertilization)

ஒரு விந்து, முட்டையை ஊடுருவி அதன் உட்பகுதியை இணைக்கும் போது, Zygote உருவாகிறது.

4. கருப்பையில் நுழைவு (Implantation)

Zygote, பல செல் பிரிவுகளுக்குப் பின் கருப்பையின் சுவரில் உறைகிறது. இதுவே கருவின் ஆரம்ப நிலையாகும்.

## மருத்துவ சார்ந்த கருத்தரிப்பு முறைகள்

IVF (In Vitro Fertilization)

1. உடல் வெளியே முட்டையும் விந்தணுவும் கலந்து கருவாகிய பிறகு கருப்பையில் நுழைத்தல்.

2. IUI (Intrauterine Insemination)

நேரடியாக விந்தணுவை உட்பகுதியில் செலுத்துதல்.

மகப்பேறு காலம் என்பது ஒரு பெண் தனது உடலிலும் மனதிலும் பெரும் மாற்றங்களை எதிர்கொள்ளும் முக்கியமான கட்டமாகும். இது பொதுவாக கருக்காலம் (முதல் நாள் முதல் குழந்தை பிறக்கும் வரை) என அழைக்கப்படும் 40 வாரங்கள் அல்லது நிலைமைகளாக மூன்று தவணைகளாக (trimesters) பிரிக்கப்படும். இந்த கட்டங்களில், பெண்களின் உடலியல் மற்றும் உளவியல் நிலைகள் விகிதாசாரமாக மாறி, ஒரு புதிய வாழ்விற்கு உடலும் மனமும் தயாராகின்றன.

முதல் தவணையில் (1-12 வாரங்கள்) ஹோர்மோன் மாற்றங்கள் காரணமாக மயக்கம், வாந்தி, அடிக்கடி சிறுநீர் கழித்தல், தூக்கவியல் மாற்றங்கள் போன்றவை ஏற்படுகின்றன. Progesterone மற்றும் Estrogen ஹோர்மோன்களின் அதிகரிப்பு காரணமாக மார்பக வலி, புணர்ச்சி ஆர்வத்தில் மாறுபாடு போன்ற மாற்றங்களும் இயல்பானவை. கருவின் ஆரம்ப வளர்ச்சி நடைபெறும் இது மிகவும் கவனத்துக்குரிய காலமாகும். தவறான உணவு அல்லது மருந்துகள் கருவின் வளர்ச்சியைப் பாதிக்கலாம்.

இரண்டாம் தவணையில் (13-26 வாரங்கள்) கருவின் வளர்ச்சி தெளிவாகத் தெரியும். வயிறு பெரிதாக ஆரம்பிக்கும். முதுகுவலி, கால்கள் வீக்கம், வாந்தி குறைவாகின்றன. உணர்ச்சி நிலை சற்று சீராகத் தோன்றலாம். இரத்த அழுத்தம், சர்க்கரை அளவு, இரத்தத் திறன் ஆகியவை பரிசோதிக்கப்பட வேண்டும். மூன்றாம் தவணை (27-40 வாரங்கள்) குழந்தையின் வளர்ச்சி அதிகரிக்கும். சுவாச சிரமம், அஜீரணம், தூக்கமின்மை போன்றவை ஏற்படலாம். பெற்றோர்களாகும் மனப் பொறுப்பு, தாய்மையின் பயம் போன்ற உளவியல் அழுத்தங்கள் அதிகரிக்கலாம்.இந்த கட்டத்தில் மருத்துவ பராமரிப்பு மிகவும் அவசியம்.

## கர்ப்பகால உள நலன்

இப்போதெல்லாம் நவீன மருத்துவம் உடல்நலத்தை முன்னிறுத்தி பலவகையான பரிசோதனைகள், சத்துணவு முறைகள், மருத்துவர் ஆலோசனைகள் ஆகியவற்றை வழங்குகிறது. ஆனால், உடல்நலத்தின் பக்கத்தில் அச்சமின்றி செல்லவேண்டும் என்றால், அந்தப் பெண்ணின் மனநிலையும் உறுதியாக இருக்க வேண்டும். இதற்காக, கர்ப்ப கால உள நல பராமரிப்பு என்பது மிகவும் முக்கியமானது. கர்ப்பம் அறியப்படும் தொடக்கக் கட்டத்திலிருந்து, ஒரு பெண் தனது மனதில் பெரும் மாற்றங்களை எதிர்கொள்கிறார். இந்த மாற்றங்கள் மரபணு, குடும்ப சூழ்நிலை, சமூக எதிர்பார்ப்புகள், எதிர்கால பயம், பொருளாதார நெருக்கடி போன்ற பல காரணிகளால் ஏற்படுகின்றன. கர்ப்பத்தால் ஏற்படும் ஹோர்மோன்கள் மாற்றங்கள் ஒரு பெண்ணின் உணர்வுகளையும், மனச்சோர்வையும் கட்டுப்படுத்துகின்றன. இந்த மனச்சோர்வு தொடர்ந்தால், அது மாதவிடாய் சுழற்சி, தூக்கக்குறைவு, உணர்ச்சி உயர்ச்சி/இறக்கம், ஆழ்ந்த பயம் அல்லது கவலை போன்ற உளவியல் விளைவுகளை ஏற்படுத்தலாம்.

பல பெண்கள் கர்ப்பத்திலேயே antenatal depression எனப்படும் கருக்கால மனச்சோர்வுக்கு ஆளாகின்றனர். இது கவனிக்கப்படாமல் விட்டுவிட்டால், குழந்தை வளர்ச்சிக்கும் பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடியதாக அமையும். கர்ப்பிணிப் பெண்களுக்கு அதிக உணர்ச்சி ஆதரவு கிடைக்க வேண்டியது அவசியம். கணவன், பெற்றோர், தோழிகள், அல்லது சமூக ஆரோக்கிய ஊழியர்களிடம் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வது உள நலத்திற்கு இன்றியமையாதது. மற்றொரு முக்கியமான அம்சம் Postpartum depression அல்லது பிறப்புக்குப் பின் ஏற்படும் மனச்சோர்வு. ஒரு பெண் தாய்மையாகும் பொழுது, தானே குழந்தைக்கு பொறுப்பேற்கும் நிலையில் இருப்பதற்கும், தன்னை மீண்டும் அடையாளம் காண்பதற்கும் இடையே அழுத்தமடைகிறாள். இந்த நிலையில், சரியான வழிகாட்டுதல் மற்றும் உளவியல் பராமரிப்பு அவசியம்.

கர்ப்பகால உளநல பராமரிப்பில் திறந்த உரையாடல் வாய்ப்பு, சீரான தூக்கம், மனநல ஆலோசனைகள், கவனச் சிதறலை குறைக்கும் நடைப் பயிற்சிகள், ஆன்மீக ஆதரவு அல்லது தியானம் போன்றன மிக முக்கியமான விடயங்கள் ஆகும். இந்த முயற்சிகள் ஒருவரை முழுமையாக மனதளவில் உறுதிப்படுத்தி, கர்ப்ப காலத்தை ஒரு நல்ல அனுபவமாக மாற்றும். மேலும், மனநலம் ஆரோக்கியமாக இருந்தால், கருப்பையின் வளர்ச்சியிலும் நேர்மறை தாக்கம் ஏற்படும் என்பது மருத்துவ ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

உளவியல் மாற்றங்கள் மற்றும் ஆதரவு தொடக்கத்தில் கருக்காலம் உறுதியாகும் போதே, “நான் தயாரா?”, “என் வாழ்க்கை எப்படி மாறும்?” என்ற போன்ற பல கேள்விகள் மனதில் எழலாம். சிலர் மகிழ்ச்சி, உற்சாகம், எதிர்பார்ப்பு போன்ற பாசிட்டிவ் உணர்வுகளை அனுபவிக்கின்றனர். உடல் மாற்றங்கள் காரணமாக சில பெண்கள் தாங்கள் “அழகில்லை” அல்லது அசௌகரியமாக உள்ளோம் எனவும் உணரலாம். எனவே, உளநலன் என்பது கருத்தரிப்புக்கு உள்ளான ஒரு பெண்ணின் ஆரோக்கியத்தில் பாரிய அளவிலான தாக்கத்தை ஏற்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

கருத்தரிப்பு என்பது ஒரு பெண்ணின் வாழ்க்கையில் உளவியல், உடலியல் மற்றும் சமூக ரீதியாக மிகவும் நுணுக்கமானதும் முக்கியத்துவமிக்கதுமான கட்டமாகும். இது தாய்மையின் ஆரம்பமே ஆகும் என்பதால், அதன் எதிர்விளைவுகள் ஒருவரின் வாழ்நிலைக்கே பெரிய தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும். எனவே, கருத்தரிப்பு தொடர்பான அறிவும் விழிப்புணர்வும் அனைவரிடமும் பரவ வேண்டும். திட்டமிட்ட கருப்பையில் தான் பாதுகாப்பும், பராமரிப்பும் சாத்தியம். மேலும், இன்றைய இளம் தலைமுறையிடம் சரியான பாலியல் கல்வி, குடும்பத் திட்டமிடல், மற்றும் கருச்சுமத்தல் தொடர்பான உண்மையான தகவல்களை வழங்குவதே சமூகத்தினுடைய பொறுப்பாகும். கருத்தரிப்பை ஒரு பெண்ணின் தனிநபர் முடிவாக மதிப்பதும், அவளுக்கு அவசியமான மருத்துவ உபசாரங்கள், ஆளுமை மற்றும் சமூக ஆதரவை வழங்குவதும், ஒரு நாகரிகமான சமுதாயத்தின் அடையாளமாகக் கொள்ளப்பட வேண்டும்.










# ‘அணையா விளக்கு’ ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், செம்மணி மனித புதைகுழிக்கு சர்வதேச நீதி கோரும் அணையா விளக்கு ஆர்ப்பாட்டத்திற்கு வலுசேர்க்கும் முகமாக மட்டக்களப்பு கோட்டைக்கல்லாறு ஓந்தாச்சிமடம் பாலத்தில் தீப்பந்தம் ஏந்திய ஆர்ப்பாட்டமொன்று திங்கட்கிழமை (23) மாலை முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் மக்கள் பலரது உடலங்களைத் தாங்கிய மனிதப் புதைகுழிகள் தமிழர் தாயகமெங்கும் அதிகரித்துச் செல்கின்றன தீர்வுகள் எதுவும் இதுவரை கிடைக்காத நிலையில் குறித்த விடயத்தை சர்வதேச பார்வைக்குக் கொண்டு செல்வதோடு அதனூடாக உறவுகளுக்கு நீதி கிடைக்க வலியுறுத்தும் வகையில் மக்கள் இந்த ‘அணையா விளக்கு’ ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை தமிழரசு கட்சியின் ஏற்பாட்டில் நடைபெற்ற குறித்த ஆர்ப்பாட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன், ஞா.சிறிநேசன், இ.சிறிநாத், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.கோடீஸ்வரன், மாநகர சபை மற்றும் பிரதேச சபைகளின் தவிசாளர்கள், கட்சியின் உறுப்பினர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதில் பேரணியாக நடந்து சென்று பாலத்தின் நடுப்பகுதியில் தீப்பந்தங்களை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஐ.நா மனித உரிமை ஆணையத்தின் ஆணையாளர் இலங்கைக்கு வருகின்ற போது இடையில் இடம்பெற்ற இவ்வாறான மனித புதைகுழிகள், இனப்படுகொலைகளுக்கு சர்வதேச பொறிமுறையின் ஊடாக நீதியை பெற்றுத் தர வேண்டும் என இதன்போது வலியுறுத்தப்பட்டது.

– பேரின்பராஜா சபேஷ், பாறுக் ஷிஹான்












அமெரிக்கா

# ஈரானுக்கு நன்றி தெரிவித்த ட்ரம்ப்

தாக்குதல் குறித்து, எங்களுக்கு முன்கூட்டியே தெரிவித்ததற்காக, ஈரானுக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாக, அமெரிக்கா ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

அமெரிக்க இராணுவ தளம் மீதான ஈரான் தாக்குதல் குறித்து அமெரிக்கா ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த பதிவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது,

“ஈரான் தனது அணுசக்தி நிலையங்களை அழித்ததற்கு அதிகாரப்பூர்வமாக மிகவும் பலவீனமான பதிலடியைக் கொடுத்துள்ளது, நாங்கள் இதை எதிர்பார்த்தோம்; திறம்படவும் எதிர்கொண்டோம். ஈரான் வீசிய 14 ஏவுகணைகளில் 13 ஏவுகணைகள் வீழ்த்தப்பட்டன.

“ஒரு ஏவுகணை மட்டும் அச்சுறுத்தல் அற்ற திசையில் சென்றதால், அதனை மட்டும் விட்டுவிட்டோம். இந்தத் தாக்குதலில் அமெரிக்கர்கள் யாரும் பாதிக்கப்படவில்லை, எந்த சேதமும் ஏற்படவில்லை என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

“இனி வெறுப்பு இருக்காது என்று நம்புகிறேன்.



தாக்குதல் குறித்து, எங்களுக்கு முன்கூட்டியே தெரிவித்ததற்காக, ஈரானுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். முன்னறிவிப்பால்தான், எந்தவொரு உயிரும் இழக்கப்படவில்லை, யாருக்கும் காயமும் ஏற்படவில்லை. இப்போதும் கூட அமைதி மற்றும் நல்லிணக்கத்தை ஈரான் தொடர முடியும். இஸ்ரேலையும் அதனைச் செய்யவே நான் ஊக்குவிப்பேன். இந்தத் தாக்குதல் விவகாரத்தில் ஈரானின் கவனத்திற்காக நன்றி.

“பிராந்தியத்திற்கு அமைதியை நிலைநாட்டிய கத்தார், எமிரேட்சுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். கட்டாரில் உள்ள அமெரிக்க தளத்தில் நடந்த தாக்குதலில் அமெரிக்கர்கள் யாரும் உயிரிழக்கவில்லை, காயமடையவில்லை என்பதை விட கட்டார் நாட்டைச் சார்ந்தவர்கள் யாரும் உயிரிழக்கவில்லை, என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்” என கூறப்பட்டுள்ளது.

ஈரான்

## காமேனியின் பதிவால் பரபரப்பு

“ஈரானிய மக்களையும் மற்றும் அவர்களுடைய வரலாற்றையும் பற்றி அறிந்தவர்களுக்கு, ஈரான் நாடு ஒருபோதும் சரண் அடையாது என்பது தெரியும்” என காமேனி அவருடைய எக்ஸ் தளத்தில் பதிவிட்டு உள்ளார்.

கட்டாரில் உள்ள அமெரிக்க இராணுவ தளம் மீது ஏவுகணை தாக்குதல்களை ஈரான் நடத்திய பின்னர், காமேனியின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

கட்டார்




## வளைகுடா வான்வழிகளுக்கு பூட்டு

கட்டாரில் தோஹாவில் உள்ள மிகப்பெரிய அமெரிக்க இராணுவத் தளமான அல்-உதெய்த் விமானப்படைத் தளம் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதலை நடத்தியதைத் தொடர்ந்து, முன்னெச்சரிக்கையாக வளைகுடா நாடுகள் தங்கள் வான்வழியை மூடியுள்ளன. பல விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

கட்டாரைத் தொடர்ந்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பஹ்ரைன் மற்றும் குவைத் ஆகிய நாடுகளும் தங்கள் வான்வெளியைத் தற்காலிகமாக மூடியுள்ளன.

திங்கட்கிழமை (23) முதல் தனது வான்வெளியை மறு அறிவிப்பு வரும் வரை மூடியுள்ளதாக குவைத் அறிவித்தது. குவைத் ஏர்வேஸ் அனைத்து விமானச் சேவைகளையும் நிறுத்திவிட்டதாகத் தெரிவித்துள்ளது.

அமெரிக்கக் கடற்படையின் ஐந்தாவது கப்பற்படைப் பிரிவு அமைந்துள்ள பஹ்ரைன் நாடு, பாதுகாப்பு காரணங்களுக்காகத் தற்காலிகமாக வான்வெளி மூடலை அறிவித்தது.

அதிகரிக்கும் பதட்டங்கள் மற்றும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களைக் காரணம் காட்டி கத்தாரும் தனது வான்வெளியைத் தற்காலிகமாக மூடியுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகமும் தனது வான்வெளியை மூடியதாக FlightRadar24 தெரிவித்துள்ளது.

வளைகுடா நாடுகளில் வான்வெளி மூடப்பட்டதால், சர்வதேச விமானப் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

ஈரான், ஈராக், சிரியா மற்றும் இஸ்ரேல் வான்வெளிகள் பெரும்பாலும் வெற்றிடமாக இருப்பதாக FlightRadar24 தரவுகள் தெரிவிக்கின்றன.

“சேஃப் ஏர்ஸ்பேஸ்” என்ற உலகளாவிய விமானப் பாதுகாப்பு அமைப்பு, ஏவுகணை மற்றும் ட்ரோன் செயல்பாடுகள் வர்த்தக விமானங்களுக்கு, குறிப்பாக அமெரிக்க விமான நிறுவனங்களுக்குக் கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக எச்சரித்துள்ளது.

### ஈரானுக்கு அமெரிக்க

## துணை ஜனாதிபதி எச்சரிக்கை

அணு ஆயுதத்தை தயாரிக்க மீண்டும் முயற்சிக்க கூடாது என ஈரானுக்கு அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி. வான்ஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளர்களை சந்தித்து பேசிய ஜே.டி.வான்ஸ், “ஈரானின் அணு நிலையங்கள் மீதான எங்களது தாக்குதல், யுரேனியத்தை புதைப்பதை இலக்காக கொண்டு இருந்தது. யுரேனியம் புதைக்கப்பட்டுவிட்டது என்று நான் நினைக்கிறேன். ஈரானின் யுரேனியம் கையிருப்பை அகற்றவும், செறிவூட்டப்பட்ட எரி பொருளை அணு ஆயுதமாக மாற்றும் ஈரானின் திறனை அழிக்கவும் அமெரிக்கா விரும்பியது.

அதன்படி, அமெரிக்கா தாக்கிய 3 செறிவூட்டல் நிலையங்களுக்கு அடியில் ஈரானின் யுரேனியம் கையிருப்பு புதைந்து போயிருக்கலாம். நாங்கள் ஈரானுடன் போரில் ஈடுபடவில்லை. ஈரானின் அணுசக்தி திட்டத்துடன் போரில் ஈடுபட்டுள்ளோம். ஈரான் எதிர்காலத்தில் அணு ஆயுதத்தை உருவாக்க விரும்பினால் அவர்கள் மீண்டும் மிகவும் சக்திவாய்ந்த அமெரிக்க இராணுவத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்” என்று தெரிவித்தார்.

திருப்பதி

## லட்டுக்கு QR Code

திருப்பதியில் லட்டு வாங்கப் பக்தர்கள் வரிசையில் நீண்ட நேரம் காத்திருப்பதைத் தவிர்க்க புதிய வசதி அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

அதாவது லட்டு டோக்கன் பெற QR Code முறை அறிமுகம் செய்யப்பட உள்ளது. இதற்கான பிரத்தியேக எந்திரத்தில் QR Code யை ஸ்கேன் செய்து விரைவாகப் பணம் செலுத்தி லட்டு பெறும் வசதி அறிமுகம் செய்யப்பட உள்ளது.

டச் ஸ்கீரினுடன் கூடிய இந்த பிரத்தியேக இயந்திரத்தில், தரிசன டிக்கெட் எண், எத்தனை லட்டு தேவை, மொபைல் எண்ணை உள்ளீடாக வழங்க வேண்டும். திரையில் தோன்றும் QR Code னை ஸ்கேன் செய்து, நாம் லட்டுக்கான பணத்தை யுபிஐ அல்லது பிற



டிஜிட்டல் முறை மூலம் பணம் செலுத்தலாம். பின்னர், அந்த டோக்கனை கவுண்டரில் வழங்கி லட்டுகளைப் பெற முடியும்.

மேலும், தரிசன டிக்கெட் இல்லாமல் திருமலைக்கு வரும் பக்தர்களும் லட்டு பெறும் வசதியும் அறிமுகம் செய்யப்பட உள்ளதாகத் திருமலை தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.



### இரண்டாவது டெஸ்ட் இன்று ஆரம்பமாகின்றது:

# பங்களாதேஷை வீழ்த்துமா இலங்கை?

இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியானது கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் இன்று காலை 10 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியானது வெற்றி தோல்வியின்றி முடிவடைந்த நிலையில், இப்போட்டியின் முடிவே தொடரைத் தீர்மானிக்கவுள்ளது.

வழமைக்கு மாறாக காலியானது துடுப்பாட்டத்துக்கு சாதகமாக இருந்த நிலையில், வழமையாக துடுப்பாட்டத்துக்கு சாதகமாக இருக்கும் எஸ்.எஸ்.சி எவ்வாறு இருக்குமென எதிர்வுகூறமுடியாமல் இருக்கின்றது.

இலங்கையணியைப் பொறுத்தவரையில், ஓய்வு பெற்ற அஞ்சலோ மத்தியூஸை பவன் ரத்னாயக்க பிரதியிடுவாரென எதிர்பார்க்கப்படுவதோடு, உபாதைக்குள்ளான மிலான் ரத்னாயக்கவை விஷ்வ பெர்ணாண்டோ பிரதியிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

மறுபக்கமாக முதலாவது டெஸ்டிலும் விரலில் வலியுடனேயே பங்களாதேஷின் அணித்தலைவர் நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ விளையாடிய நிலையில், மீண்டும் பயிற்சியின்போது விரலில் தாக்கமடைந்த நிலையில் அவரின் பங்கேற்பு குறித்து சந்தேகம் நிலவுகின்றது. தவிர நயீம் ஹஸனை மெஹிடி ஹஸன் மிராஸ் பிரதியிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

> **“இலங்கையணியைப் பொறுத்தவரையில், ஓய்வு பெற்ற அஞ்சலோ மத்தியூஸை பவன் ரத்னாயக்க பிரதியிடுவாரென எதிர்பார்க்கப்படுகின்றது**

### இன்று ஆரம்பிக்கின்றது டெஸ்ட் தொடர்:

## அவுஸ்திரேலியாவை வெல்லுமா மேற்கிந்தியத் தீவுகள்



மேற்கிந்தியத் தீவுகள், அவுஸ்திரேலியாவுக்கிடையிலான டெஸ்ட் தொடரானது, பார்படோஸில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.

அவுஸ்திரேலியாவுக்கு மேற்கிந்தியத் தீவுகள் சவாலளிக்க வேண்டுமானால் கிறேய்க் பிறத்வெய்ட், அணித்தலைவர் றொஸ்டன் சேஸ், ஷே ஹோப், கேசி கார்ட்டி, ஜஸ்டின் கிரேவ்ஸ் உள்ளிட்டோர் பெரிய இனிங்ஸ்களை ஆட வேண்டியுள்ளது.

மறுபக்கமாக ஸ்டீவன் ஸ்மித் காயமடைந்துள்ளதுடன், மர்னுஸ் லபுஷைன் அணியிலிருந்து நீக்கப்பட்ட நிலையில் சாம் கொன்ஸ்டாஸ் தன்னை நிரூபித்துக் காட்ட வேண்டிய கடப்பாடு காணப்படுவதுடன், ஜொஷ் இங்லிஷ் தனதிடத்தை உறுதிப்படுத்துவதற்கான வாய்ப்பாக இத்தொடர் காணப்படுகின்றது.

இதேவேளை ஜொஷ் ஹேசில்வூட்டுக்குப் பதிலாக மற் கூனுமென் விளையாடக்கூடிய வாய்ப்பு காணப்படுவதுடன், சில வேளைகளில் அவரை ஸ்கொட் போலண்ட் பிரதியிடக்கூடிய வாய்ப்புகளும் காணப்படுகின்றன.

இதுதவிர அண்மைக்காலமாக ஓட்டங்களைப் பெற உஸ்மான் கவாஜா தடுமாறுகின்ற நிலையில் தனதிடத்தை நிரூபிக்க வேண்டிய நிலையில் அவர் காணப்படுகின்றார்.



### பங்களாதேஷுக்கு எதிரான 2ஆவது

## டெஸ்டில் மிலான் இல்லை

பங்களாதேஷுக்கெதிரான இரண்டாவது டெஸ்டிலிருந்து உபாதை காரணமாக இலங்கையின் வேகப்பந்துவீச்சு சகலதுறைவீரர் மிலான் ரத்னாயக்க விலகியுள்ளார்.

ரத்னாயக்கவின் பிரதியீடாக விஷ்வ பெர்ணாண்டோ பெயரிடப்பட்டுள்ளார்.

இதேவேளை இலங்கைக் குழாமில் டுனித் வெல்லலாகேயும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

### இந்தியாவுக்கெதிரான முதலாவது டெஸ்டில்

## வெற்றிக்கு இங்கிலாந்துக்கு 350 ஓட்டங்கள் தேவை

இந்தியாவுக்கெதிரான முதலாவது டெஸ்டில் வெற்றி பெறுவதற்கு இங்கிலாந்துக்கு 350 ஓட்டங்கள் தேவைப்படுகிறது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில், லீட்ஸில் வெள்ளிக்கிழமை(20) ஆரம்பித்த இப்போட்டியின் நான்காம் நாளை தமது இரண்டாவது இனிங்ஸில் 2 விக்கெட்டுகளை இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த இந்தியா, லோகேஷ் ராகுலின் 137, றிஷப் பண்டின் 118, இரவீந்திர ஜடேஜாவின் ஆட்டமிழக்காத 25, கருண் நாயரின் 20 ஓட்டங்களோடு சகல விக்கெட்டுகளையும் இழந்து 364 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில், ஜொஷ் டொங்க், பிறைடன் கார்ஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், ஷொய்ப் பஷிர் 2, கிறிஸ் வோக்ஸ் மற்றும் அணித்தலைவர் பென் ஸ்டோக்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர். இந்நிலையில், 371 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் இங்கிலாந்து, நான்காம் நாள் முடிவில் விக்கெட் இழப்பின்றி 21 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் ஸக் குறோலி 12 ஓட்டங்களுடனும், பென் டக்கெட் ஒன்பது ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதுள்ளனர்.


### கழக உலகக் கிண்ணம்:

## வெளியேற்றப்பட்ட அத்லெட்டிகோ மட்ரிட்

சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் கழக உலகக் கிண்ணத் தொடரிலிருந்து ஸ்பானிய லா லிகா கழகமான அத்லெட்டிகோ மட்ரிட் வெளியேற்றப்பட்டுள்ளது.

ஐக்கிய அமெரிக்காவில் செவ்வாய்க்கிழமை (24) அதிகாலை நடைபெற்ற பிரேஸிலியக் கழகமான பொடாபொகோவுடனான குழு பி போட்டியொன்றில் மூன்று கோல் வித்தியாலசத்தில் வெல்ல வேண்டுமென்ற நிலையில், 1-0 என்ற கோல் கணக்கிலேயே வென்ற அத்லெட்டிகோ தொடரிலிருந்து வெளியேறியது.

அத்லெட்டிகோ சார்பாகப் பெறப்பட்ட கோலை அந்தோனி கிறீஸ்மன் பெற்றிருந்தார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 25, ஜூன் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.